**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 152/2021 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | திரு. ராமநாதன் |
| Father's Name/Husband Name: | திரு. செங்கமலை |
| Village : | தழுதாழை |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 73 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 02.12.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. லட்சுமணபெருமாள் , இளநிலை உதவியார் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 2 ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 09.08.2021ம் தேதி அன்று சுமார் மதியம் 1–1.30 மணிக்குள் நானும் எனது மனைவியும் வயலில் இருந்தோம். என் மனைவி வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது எதிரி ஜெயக்கொடி என்பவர் இழுத்து போட்டு என் மனைவியை அடித்தார். எதிரி ராஜ்குமார் சோளப்பயிரை மாட்டை ஓட்டி சேதப்படுத்தினார். அதை கேட்டதற்கு எனது மனைவியின் கையை முறிக்கி எதிரிகள் இருவரும் சேர்ந்து அ.சா.1யை கீழே தள்ளி கட்டையால் கையில் அடித்ததில் இரண்டு கையும் இரத்த காயம் ஏற்பட்டு உடைந்தது. நான் சண்டையை விலக்கிக்கொண்டிருந்த என்னையும் சாட்டையால் அடித்து கீழே தள்ளி கட்டையால் என்னை எதிரிகள் இருவரும் அடித்தார்கள். எனக்கு மேலில் காயம் ஏற்பட்டு நெஞ்சுவலி வந்தது. பயிரை மிதிக்காமல் ஓட்டுங்கள் என்று எதிரிகளிடம் சொல்லியதற்கு இவ்வாறு செய்து விட்டார்கள். இந்த வழக்கு சம்பவம் தெரிந்து என் மகன் வந்தார். 108 ஆம்புலன்சு

மூலமாக அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கு வீட்டிற்கு போகிற பாதை சம்மந்தமாக முன்விரோதம் இருக்கிறது என்றால் இல்லை. எதிரி ராஜ்குமார் பயிர் பண்ணும் போது எனது பயிரின் உயரம் என்னவென்றால் 2அடி இருக்கும். எனது நிலத்திற்கு எதிரிகளின் நிலம் எந்த பக்கம் உள்ளது என்றால் தென் பக்கமும் வடப்பக்கமும் உள்ளது. எதிரிகள் மாட்டிற்கு விதைக்கும் சோளப்பயிர் தான் விதைத்தார்கள் என்றாலும் அவர்களின் நிலம் மானாவரி என்றாலும் சரிதான் அவர்கள் மாடுகட்டி ஓட்டி விதைத்தார்கள். எதிரிகளின் மாடு எங்கள் நிலத்திற்கு ஓரமாக ஓட்டிக் கொண்டு வரும்போது எனது பயிரை மிதித்து கடித்து சேதப்படுத்தி விட்டது. நான் எதிரி ராஜ்குமாரிடம் ஏன் பயிரை மிதித்து சேதப்படுத்திவிட்டாய் என்று கேட்டேன் என்றால் சரிதான். எதிரி ராஜ்குமார் நானும் சோளப்பயிரை தான் விதைக்கிறேன் வேண்டுமென்றால் 2 கட்டு சோளப்பயிரை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார் என்றால் சொல்லவில்லை. 1ம் எதிரி ஜெயக்கொடி சௌந்திரராஜனின் தாயார் சமாதியில் உட்கார்ந்திருந்தார் என்றால் சரிதான். நான் எதிரி ஜெயக்கொடியை மேற்கண்ட சம்பவமும் குறித்து திட்டினேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் திட்டியதால் தான் எதிரி ஜெயக்கொடி சமாதியிலிருந்து சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரியல்ல. நான் ஜெயக்கொடியை அடிக்கும்போது எனது மனைவி ஜெயக்கொடியின் கைகளை பிடித்துக் கொண்டார் என்றால் சரியல்ல. அப்போது ஜெயக்கொடியை கண்ணத்தில் அறைந்தேன் என்றால் சரியல்ல நான் விலக்கிவிட தான் சென்றேன். நானும் எனது மனைவியும் ஜெயக்கொடியை அடிப்பது பார்த்து தான் ராஜ்குமார் சம்பவயிடத்திற்கு வந்து சம்பவத்தை விலக்கிவிட முயற்சி செய்யும்போது எனது மனைவி பின்பக்கமாக கீழே விழுந்து கையை ஊனியதால் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது மனைவி கீழே விழுந்ததால் எதிரிகளும் சேர்ந்து தான் 108 ஆம்புலன்சில் அனுப்பி விட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளும் அரும்பாவூர் காவல்நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் தெரியாது. நாங்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்ததால் போலிசார் அவர்கள் மீது நடவடிக்கை

எடுக்கவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் ஜெயக்கொடியை சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆண்டிற்கு முன்பாக முத்துச்சோளம் பயிரிட்டதற்கு அப்போது அங்கு சேதம் ஏற்பட்டது குறித்து திட்டினீர்களோ இப்போது என்ன சொல்லுகிறாய் என்று தகாத வார்த்தைகளால் திட்டியதால் தான் ஜெயக்கொடி என்பவர் அருகே வந்தபோதே எனது மனைவி அ.சா.1 ஜெயக்கொடி என்பவரின் கையை பிடித்துக் கொண்ட போது நான் ஜெயக்கொடியின் கண்ணத்தில் அடித்ததாகவும் அப்போது 2ம் எதிரி அங்கு வந்து அ.சா.1ன் கையைப்பிடித்து நெஞ்சில் தள்ளும்போது தவறி பின்பக்கமாக விழும்போது கைகளின் மூட்டுப்பகுதியில் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக எதிரிகள் அடித்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் காவலர்கள் சாட்சி சொல்வதைப் பற்றி சொல்லிக் கொடுத்தார்களா என்றால் இல்லை. சம்பவ நடந்த பிறகு போலிசார் எப்போது என்னை விசாரித்தார்களா என்றால் சம்பவம் நடந்த மறுநாள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது என்னை விசாரணை செய்தார்கள்.

**மறு விசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.